ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2161/2 - 2020 පෙබරවාරි මස 03 වැනි සඳුදා - 2020.02.03
*2161/2 ஆம் இலக்கம் – 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை*

(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KDS/HAR/4/2/1/41.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின்
குறிப்பு இல.: 4-3/ 9/2014/ WS/ 16.

கண்டி மற்றும் அண்மித்த பகுதிகளுக்கான நீர் வழங்கல் செயற்திட்டத்தின் மெதவல புதிய சேவை நீர்த்தேக்கத்தின் நுழைவாயிலுக்காக மேலதிக காணித்துண்டு ஒன்றை எடுக்கத் தேவையான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில், குலுகம்மன சியபத்துவ உப பிரிவில் மெதவல கிராமத்தில் அமைந்துள்ள, கண்டி மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் அதிகாரியினால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 6958க்குரிய அடிப்படை வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 மற்றும் 02 எனக் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தமாக 0.0075 ஹெக்டயார் அளவிலான காணித் துண்டுகள் 02.

01. துண்டு இல. 1 மற்றும் 02
காணியின் பெயர்: கல்படிகாவ வத்த; உரிமை கோருவோர்: திரு. ஏ. பீ. ஜீ. நெவில் பிரியந்த புளுகும்புற, இல. 212, அங்கொட, மெதவல; விஸ்தீரணம்: 0.0075 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மை யையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டு தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட

விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மொஹான் தர்மதாச,
பிரதேச செயலாளர்,
ஹாரிஸ்பத்துவ.

பிரதேச செயலகம்,
நுகவெல, ஹாரிஸ்பத்துவ,
2020, சனவரி 30.

02 - 344

---

திருத்தம்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460) கீழான அறிவித்தல்.**

குறிப்பு இல.: பீடீ/பீடீ/எல்என்டீ/3/5/18.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் 1993/19 ஆம் இலக்க 2016.11.17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் 4 ஏ பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப வரைப்பட இலக்கம் ப 685 க்கு உரித்தான காணித் துண்டு இலக்கம் 34ஆனது மீண்டும் அளவீடு செய்யப்பட்டதுடன், அந்த அளவீட்டு திருத்தத்தின் படி ஆரம்ப வரைபட இலக்கம் ப 735 இன் காணி துண்டு இல. 1 மற்றும் காணி துண்டு இல. 2 என பிரிக்கப்பட்டுள்ளதுடன், அளவீட்டு திருத்தத்திற்கு அமைவாக ப 685 இன் காணி துண்டு இல. 34 க்கு உரிய பகுதியானது கீழே குறிப்பிடப்பட்டுள்ளப்படி திருத்தப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.

துண்டு இல. 34 இன் பிரிவுகள்.

**துண்டு இல. 1**

காணியின் பெயர்: நிகவத்த; விபரம்: தோட்டம், 5-10 வருட வயதெல்லையுடைய கலவை பயிர்செய்கை காணப்படுகிறது; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: இல. 319 ஏ, பசரை வீதி பதுளையில் வசிக்கும் ரத்னாயக்க முதியன்சேலாகே யசவதீ ரத்னாயக்க; விஸ்தீரணம்: 0.0083 ஹெக்டயார்.

**துண்டு இல. 2**

காணியின் பெயர்: நிகவத்த; விபரம்: தோட்டம், 2-3 வருட வயதெல்லையுடைய கலவை பயிர்செய்கை காணப்படுகிறது; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: இல. 319 பீ, பசரை வீதி பதுளையில் வசிக்கும் ரத்னாயக்க முதியன்சேலாகே சந்திராணி; விஸ்தீரணம்: 0.0028 ஹெக்டயார்.

டீ. எம், எல். எச். திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை,
2020, சனவரி 22.

02 - 345